www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு – 2025

## ஆறாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **கணிதம்** **மதிப்பெண்கள்:50**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **5x1=5**

1. $\frac{6}{7} = \frac{A}{49}$ எனில் A இன் மதிப்பு என்ன ?

அ) 42 ஆ) 36 இ) 25 ஈ) 48

2. $\frac{45}{74}$ இன் தலைகீழி.

அ) $\frac{45}{74}$ ஆ) $1\frac{29}{74}$ இ) $\frac{74}{45}$ ஈ) $1\frac{74}{29}$

3. −7 இன் வலது புறம் 1 அலகு தொலைவில் உள்ள எண்

அ) +1 ஆ) −8 இ) −7 ஈ) −6

4. ஒரு சதுர வடிவ பூங்காவின் சுற்றளவு 40மீ எனில் பூங்காவின் ஒரு பக்கத்தின் அளவு ________

அ) 20 மீ ஆ) 10 மீ இ) 8 மீ ஈ) 5 மீ

5. பின்வருவனவற்றுள் எந்த எழுத்திற்குச் சமச்சீர்க்கோடு கிடையாது ?

அ) V ஆ) Q இ) T ஈ) W

**II கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5x1=5**

6. ________ என்ற எண்ணிற்கு அந்த எண்ணே தலைகீழாக அமையும்.
7. ________ ஆனது ஒவ்வொரு மிகை முழுவை விடக் குறைவாகவும், ஆனால் ஒவ்வொரு குறை முழுவைவிடப் பெரியதாகும்.
8. ஒரு செவ்வகத்தின் எதிர் எதிர் பக்கங்கள் ________ நீளமுடையவை.
9. ________ ஆனது மிகை முழுவும் அல்ல, குறை முழுவும் அல்ல.
10. ________ வடிவம் எண்ணற்ற சமச்சீர் கோடுகளை பெற்றிருக்கும்.

**III சரியா (அல்லது) தவறா எனக் கூறுக:** **5x1=5**

11. தகா பின்னத்தின் தலைகீழ் எப்போதும் ஒரு தகு பின்னமாக இருக்கும்.
12. −10 மற்றும் 10 ஆகியவை 1 லிருந்து சமதொலைவில் உள்ளன.
13. −100 இன் எதிரெண் +100 ஆகும்.
14. ஒரு மூடிய வடிவத்தின் எல்லையின் நீளம் அவ்வடிவத்தின் சுற்றளவு எனப்படும்.
15. ஒரு சமபக்க முக்கோணம் மூன்று சமச்சீர் கோடுகளைப் பெற்றிருக்கும்.

**IV பின்வருவனவற்றைப் பொருத்துக** **5x1=5**

| | | |
|---|---|---|
| 16. சதுரத்தின் பரப்பளவு | – | சமச்சீர் கோடு இல்லை |
| 17. செவ்வகத்தின் பரப்பளவு | – | ஒரு சமச்சீர் கோடு |
| 18. முக்கோணத்தின் பரப்பளவு | – | நீளம் x அகலம் |
| 19. இரு சமபக்க முக்கோணம் | – | பக்கம் x பக்கம் |
| 20. இணைகரம் | – | ½ x அடிப்பக்கம் x உயரம் |

**V ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்** **5x2=10**

21. $\frac{1}{7}$ மற்றும் $\frac{3}{9}$ இன் கூடுதல் காண்க.

22. பெருக்குக : $\frac{3}{8} \times \frac{4}{5}$

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



23. –3 மற்றும் 3 ஆகிய முழுக்களுக்கிடையே உள்ள அனைத்து முழுக்களையும் எழுதுக.

24. பெட்டியில் > , < அல்லது = எனப் பொருத்தமான குறியீட்டை இடுக.

i) -8 ☐ -7 ii) -999 ☐ -1000

iii) -111 ☐ -111 iv) 0 ☐ -200

25. 12 மீ நீளமும் 10 மீ அகலமும் கொண்ட செவ்வகத்தின் பரப்பளவு காண்க.

26. 7 மீ, 8 மீ, 10மீ பக்களவு கொண்ட அசமபக்க முக்கோணத்தின் சுற்றளவு காண்க.

27. சதுரம், செவ்வகம் ஆகிய வடிவங்களுக்கு சமச்சீர் கோடுகள் வரைக.

VI ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் 5x3=15

28. ஒரு தகரப் எண்ணெய் பெட்டியில் 3¾ லிட்டர் எண்ணெய் இருந்தது. அதிலிருந்து 2½ லிட்டர் எண்ணெய் பயன்படுத்தப்பட்டு விட்டது. எனில் எவ்வளவு எண்ணெய் மீதம் இருக்கும்?


29. 6மீ நீளமுடைய கம்பியினை 1½ மீ நீளமுடைய சிறிய கம்பிகளாக வெட்டினால் எத்தனை சிறிய கம்பிகள் கிடைக்கும்?

30. பின்வரும் முழுக்களை ஏறு வரிசையில் எழுதுக.

-15, 0, -7, 12, 3, -5, 1, -20, 25, 18

31. ஓர் எண் கோட்டை வரைந்து 4, –3, 6, –1 மற்றும் –5 ஆகிய முழுக்களை அதன் மீது குறிக்கவும்.

32. கொடுக்கப்பட்ட வடிவத்தின் சுற்றளவு காண்க.




33. ஒரு செங்கோண முக்கோண வடிவிலான ஒரு வயலின் அடிப்பக்கம் 25மீ மற்றும் உயரம் 20மீ. அந்த வயலைச் செப்பனிடுவதற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.45% வீதம் ஆகும். மொத்த செலவு காண்க.

34. 6அடி, 8அடி மற்றும் 10 அடி பக்க அளவுகளுள் ஒரு செங்கோண முக்கோணத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவு காண்க.

VII ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளி 1x5=5

35. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு அட்டவணையை நிறைவு செய்க.

$C_1$ : இயல் எண்களில் முதல் எண்.

$C_2$ : –5 ன் எதிரெண்

$C_3$ : –7 என்ற எண்ணிற்கு வலது புறத்தில் 4 அலகுகள் தொலைவில் உள்ள எண்

$C_4$ : மிகை எண்ணும் அல்லாத குறை எண்ணும் அல்லாத எண்

$C_5$ : இயல்பான எடையை விட 10கிகி குறைவு.

$C_6$ : ரூ.100 இலாபம்.

| | | |
|---|---|---|
| $C_1$ | $C_2$ | $C_3$ |
| $C_4$ | $C_5$ | $C_6$ |

36. கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் எந்தெந்த எழுத்துக்களுக்கு

1) சமச்சீர் கோடு இல்லை

2) ஒரு சமச்சீர் கோடு உண்டு

3) இரண்டு சமச்சீர் கோடுகள் உண்டு

4) எண்ணற்ற சமச்சீர் கோடுகள் உண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| A | M | P | E | D |
| I | K | O | N | X |
| S | H | U | V | W |
| Z | Y | T | J | F |

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com